‘தமிழ்நாடு’ என்ற பெயருக்காக தன்னுயிர் தந்த தியாகி

சங்கரலிங்கனாரின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்!

நினைவு நாளையொட்டி – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 15-

தியாகி சங்கரலிங்கனாரின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

நம் மாநிலத்துக்கு தமிழ் நாடு என பெயர் சூட்ட வேண் டுமென தன்னுயிர் தந்த தியாகி சங்கரலிங்கனாரின்



நினைவு நாள் இன்று.

தனது கோரிக்கையில் உறுதியுடன் நின்று 76 நாட்கள் தொடர் உண்ணாவி ரதம் இருந்து போராட்டக் களத்திலேயே மறைந்தவர்.

அவரது போராட்டத்துக்கும் தியாகத்துக்கும் அன்றைய ஆட்சியாளர்கள் செவிசாய்க் காத நிலையில்,

முதல்முறையாக கழக ஆட்சி அமைந்த போது, பேரறிஞர் அண்ணா அவர் கள், தாய் நிலத்துக்கு தமிழ் நாடு என்று பெயர் சூட்டி சங்க ரலிங்கனாரின் தியாகத்தைப் போற்றினார்.

தமிழ்நாடு போல் சங்கர லிங்கனாரின் புகழும் தியாக மும் என்றும்நிலைத்திருக்கும்!

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித் துள்ளார்.

காவல்துறை தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது!

த.வெ.க. அரசுக்கு எதிரான சமூக வலைதளப் பதிவுகள் முடக்கம்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு! உரிய முறையில் விசாரிக்க ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, அக். 15-

த.வெ.க. அரசுக்கு எதிரான சமூக வலைதள பதிவுகள் நீக்கப் படுவது ஏன்..? என ஒன்றிய அமைச்சருக்கு கழகத் துணைப் பொதுச் செய லாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கடி தம் எழுதியுள்ளார். அரசியல் விமர் சனங் களை முடக்க காவல் துறை, அரசின் பிற துறைகள் தவறாக பயன்படுத்தப்படுகின்றன. இது தொடர்பாக மெட்டாவிடம் விளக் கம் கேட்கவும், விசாரிக்கவும் வேண்டும் என அவர் கடிதத்தில் வலியுறுத்தி யுள்ளார்.

ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணாவுக்கு எழுதிய அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள தாவது:-

சமூக ஊடகத் தளங்களில், குறிப்பாக இன்ஸ்டாகிராமில் (Ins tagram), கருத்து சுதந்திரம் மற் றும் ஜனநாயக ரீதியிலான அரசி யல் விவாதங்கள் தொடர்பான ஒரு தீவிரமான கவலைக்குரிய விஷயத்தை உங்கள் கவனத்திற் குக் கொண்டுவர இக்கடிதத்தை எழுதுகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள த.வெ.க. அரசாங்கத்தை விமர்சிக்கும் இன்ஸ்டாகிராம் கணக்குகள் மற்றும் பதிவுகள் தொடர்ந்து கட் டுப்படுத்தப்படுவதும், நீக்கப்படு வதும், அவற்றின் பார்வைத் தன்மை (visibility) குறைக் கப்படுவதும் எங்கள் கவனத் திற்கு வந்துள்ளது. இத்தகைய கட்டுப்பாடுகள் மீண்டும் மீண் டும் விதிக்கப்படுவது, சட்டப்பூர்வ மான அரசியல் விமர்சனங் களை முன்வைக்கும் கணக்கு கள் அல்லது உள்ளடக்கங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க காவல்துறை மற்றும் பிற அரசு துறைகள் தவறாகப் பயன்படுத் தப்படுகின்றனவா என்ற கவ லையை எழுப்பியுள்ளது.

‘தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை நிறுவனங்களுக் கான வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள்) விதிகள், 2021’ (Information Tech nology Rules, 2021), இடை நிலை நிறுவனங்களை நிர்வகிக் கும் குறை தீர்ப்பு மற்றும் பொறுப் புக்கூறல் வழிமுறைகளை நிறு வியுள்ளன. இந்த வழிமுறை கள்,தளத்தின் நடவடிக்கைகளை எதிர்த்துப் போட்டியிட பயனர்க ளுக்குப் பாதுகாப்பையும் வழங் குகின்றன. எனவே, மாறுபட்ட கருத்துக்களை அல்லது எதிர்ப்புக் குரல்களை ஒடுக்கு வதற்கு இந் தக் குறைதீர்ப்பு வழி முறைகள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்ப டாமல் இருப்பதை உறுதி செய் வது அவசியமாகும்.

த.வெ.க. மற்றும் அதன் ஆதர வாளர்களால் பரப்பப்பட்ட போலிச் செய்திகள் குறித்து நடவ



டிக்கை எடுக்காத டிஜிட்டல் இடை நிலை நிறுவனங்களுக்கு எதி ராக, சென்னை உயர் நீதிமன்றத்தில் ‘ரிட் மனு (குற்றவி யல்) எண் 2249/2026’ஐத் தாக் கல் செய்து தி.மு.க. இதற்கு முன்பு சட்ட நடவடிக்கை எடுத்தி ருந்தது. அந்த ரிட் மனு இன்னும் நிலுவையில் உள்ள நிலையில், போலிச் செய்திகளை நீக்குவதற்குப் பதிலாக, தற்போ தைய த.வெ.க. தலைமையி லான மாநில அரசுக்கு எதிரான உண்மையான விமர்சனங் களை அந்த இடைநிலை நிறுவ னங்கள் நீக்கத் தொடங்கியுள் ளன;

மேலும் அவை தங்கள் செயல் பாட்டில் வெளிப்படையான பார பட்சத்தைக் காட்டுகின்றன. சம் பந்தப்பட்ட இடைநிலை நிறுவனங்களின் குறைதீர்ப்பு வழிமுறைகள் மற்றும் மாநிலக் காவல்துறை மூலமாக நாங்கள் தொடர்ந்து புகார்களை எழுப்பிய போதிலும், அவை உரிய தீவிரத் துடன் கையாளப்படவில்லை; பல சந்தர்ப்பங்களில் மாநிலக் காவல்துறை முதல் தகவல் அறிக் கையைப் பதிவு செய்யவும் மறுத் துவிட்டது.

சட்டப்பூர்வமான அரசியல் கருத்துக்களைக் குறிவைக்க மாநிலக் காவல்துறை மற்றும் பிற அரசு அதிகார அமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற னவா என்பதை ஆய்வு செய்யு மாறு அமைச்சகம், உரிய சைபர் குற்றத் தடுப்பு அதிகாரிகள் மற் றும் அரசை நான் வலியுறுத்து கிறேன்.

மேலும், இது தொடர்பான புகார்கள் குறித்து ‘மெட்டா’ (Meta) நிறுவனத்திடம் இருந்து தகவல்க ளைப் பெறுமாறும், இடைநிலை நிறுவனங்களின் அமலாக்க நட வடிக்கைகள் அரசியல் சார்பற்ற தாகவும், அதே சமயம் வெளிப்ப டைத்தன்மை, விகிதாச்சாரம் மற்றும் உரிய சட்ட நடைமுறை களின் கொள்கைகளுக்கு இணங்கவும் இருப்பதை உறுதி செய்யுமாறும் அமைச்சகத்தை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜய் தீவிர பிரச்சாரம் மேற்கொண்ட போதிலும் வாக்கு வித்தியாசம் மிகவும் குறைவு!

இடைத் தேர்தலில் தி.மு.க. தனது வலுவான அடித்தளத்தை தக்க வைத்துள்ளது!

‘தி இந்து’ நாளேடு தலையங்கம்!

சென்னை, அக். 15-

தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தலில் தி.மு.கழகம் தனது வலுவான அடித்தளத்தை தக்க வைத்துள் ளது என்று ‘தி இந்து’ நாளேடு தலையங்கம் எழு தியுள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏ.க்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ஆளும் கட்சிக்கு தாவி மீண்டும் இடைத் தேர் தலில் போட்டியிடுவது மக்கள் அளித்த தீர்ப்பை மீறும் செயல் எனவும் ‘தி இந்து’ நாளிதழ் தலையங்கம் விமர்சித்துள்ளது.

வித்தியாசமான வெற்றி எனும் தலைப்பில் ‘தி இந்து’ நாளிதழ் தலையங்கம் ஒன்றை வெளி யிட்டுள்ளது. அதில், மேற்கு வங்கம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி இடைத்தேர்தல் முடிவுகள் ஆச் சரியம் அளிக்கவில்லை , சட்டமன்றத் தேர்தலுக் குப் பிறகு வெறும் 5 மாதங்களிலேயே, அந்தந்த மாநிலங்களில் ஆட்சியில் உள்ள கட்சிகளே இடைத்தேர்தல் நடைபெற்ற 5 தொகுகளிலும் வெற்றி பெற்றதையும், இதில் மாறுபட்டது வெற் றியின் அளவு மட்டுமே என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில், நந்திகிராம் தொகுதிகளில் முறையே 76, 63 சதவீதம் என்ற வலுவான வாக்கு விகிதங்களுடன் பா.ஜ.க. வெற்றி பெற்ற தாகவும், புதுச்சேரியில், ஆளும் என்.ஆர். காங் கிரஸ் தட்டாஞ்சாவடி தொகுதியில் 61சதவீதம் வாக்குகளைப் பெற்றதாகவும் இத்தலையங்கம் தெரிவித்துள்ளது. ஆனால், தாராபுரம் மற்றும் மதுராந்தகம் தொகுதிகளின் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு ஆளும் கட்சியான தவெகவில் இணைந்ததைத் தொடர்ந்து, இவர்களையே மீண்டும் வேட்பாளர்களாக த.வெ.க. நிறுத்திய தும், இவர்கள் இருவரும் முறையே 37 மற்றும் 40 சதவீதம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற் றதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நிலவும் மும்முனைப் போட்டி அரசியல் களத்தை விறுவிறுப்பாக வைத்துள்ளதாகவும், இந்த வெற்றி , மொத்தம் 234 உறுப்பினர்களைக் கொண்ட அவையில் தவெகவின் எண்ணிக் கையை 109ஆக உயர்த்த உதவியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள இத்தலையங்கம், அதேநேரம் முதலமைச்சர் விஜய் தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்ட போதிலும் வாக்கு வித்தியாசம் மிகக் குறைவாகவே இருந்தது, தேனிலவு காலம் முடிந்து விட்டதையே உணர்த்துகிறது என்றும் தெரிவித்துள்ளது.

தற்போது பிரதான எதிர்க்கட்சியாக திகழும் திமுக, கடந்த மே மாதத் தேர்தலில் எதிர்பாராத தோல்வியைச் சந்தித்திருந்தாலும், தனக்கான வலுவான அடித்தளத்தைத் தக்கவைத்துள் ளதை நிரூபித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டி உள்ள தி இந்து தலையங்கம், அதேவேளை யில், மே மாதத் தேர்தலில் பெற்ற இடங்களின் அடிப்படையில் அ.தி.மு.க, மூன் றாவது இடத்தைப் பிடித்திருப்பது, அதன் சரிவு குறித்த கவலை களை அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது. அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பி னர்களைத் தொடர்ந்து தக்கவைக்க முடியுமா என்பது குறித்து அதன் தலைமை கடுமையான கேள்விகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் மேலும் நான்கு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் த.வெ.க.வில் இணைந்துள்ள நிலையில், அவர்களின் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாகவும் இது தமி ழக அரசியலில் ஒரு பின்னடைவான போக்கு என்றும் இத்தலையங்கம் விமர்சித்துள்ளது.

தேர்தல் முடிந்த சில மாதங்கள் அல்லது சில நாட்களில் அதிகாரத்தின் சலுகைகளைப் பெறுவ தற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பத விையை ராஜினாமா செய்வதும், ஆளும் கட்சி அவர்களை மீண்டும் வேட்பாளர்களாகக் களமி றக்குவதும் ஜனநாயகத்திற்கு பின்னடைவு என் றும் குற்றம்சாட்டி உள்ள தி இந்து தலையங்கம்,

இது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் நோக் கத்தையே சிதைப்பதுடன், சட்டமன்றத் தேர்த லில் மக்கள் அளித்த தீர்ப்பையும் மீறுவதாக அமைகிறது என்றும், இத்தகைய அரசியல் நகர் வுகளை வாக்காளர்கள் அங்கீகரித்திருப்பது, மக் கள் பிரதிநிதித்துவத்தின் தரம் குறித்து அக்கறை கொண்ட எவருக்கும் கவலையளிக்கக்கூடியது என்றும் சுட்டிக்காட்டி உள்ளது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; குழந்தைகள் தினத்துக்கு பள்ளி மாணவர்களுக்கு கடலை மிட்டாய் தரலாம்ன்னு அதிகாரிகள் ரெக்கமெண்ட் செய்தார்களாம். அதை மீறி இப்ப கேக் தரப் போறாங்களாமே!

பட்டணம் : **ஆமாமய்யா; முதலமைச்சரே சொல்லிட்டாராம். ‘கேக்’தான் தரணும்ன்னு. எது எப்படியோ ‘கடலை மிட்டாய்,’ ‘கேக்’ அது இதுன்னு சொல்லி, கடைசியிலே ‘அல்வா’ கொடுக்காம இருந்தா சரி!**

“தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்க!”

எழும்பூரில் மக்கள் அதிகாரம் உள்ளிட்ட அமைப்புகள் ரயில் மறியல்!

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலுக்கட்டாயமாக கைது!

சென்னை, அக். 15-

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி மக் கள் அதிகாரம் அமைப்பி னர் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் போராட் டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மக்கள் அதிகாரம் அமைப் பினர் 50 க்கும் மேற்பட் டோர் சென்னை எழும் பூர் ரயில் நிலையத்தில் ரயில் மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

ராஜஸ்தான் மாநிலத் தில் இருந்து சென்னை எழும்பூர் வந்து காலை 10 மணிக்கு எழும்பூரில் இருந்து மதுரை புறப்பட தயாராக இருந்த அனுரத் ரயிலை மறித்து தண்டவா ளத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட் டதால் பரபரப்பு ஏற்பட் டது.

பின்னர் போராட்டத் தில் ஈடுபட்ட மக்கள் அதி காரம் அமைப்பினரை காவல்துறையினர் வலுக் கட்டாயமாக கைது செய் தனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது

ஆடு மேய்க்கும் தொழிலாளி வீட்டில்

ரூ.100 மின் கட்டணம் ரூ.10,938 ஆக உயர்வு!

மின் இணைப்பு துண்டிப்பால் குடும்பம் தவிப்பு!

விருதுநகர், அக். 15-

திருவில்லிபுத்தூர் அருகே ஆடு மேய்க்கும் தொழிலாளியின் வீட் டிற்கு மின்சார கட்டணம் 10 ஆயிரத்து 938 ரூபாய் வந்துள்ளதால் அந்த குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருகே ராமகிருஷ்ணாபுரம் கிரா மத்தைச் சேர்ந்த ஆடு மேய்க்கும் தொழிலாளி ராஜேந்திரன் வீட்டிற்கு வழக்கமாக ரூ.100 மின் கட்டணம் வந்த நிலை யில், தற்போது ரூ.10,938 எனக் கட்டணம் வந்த தால் அதிர்ச்சியடைந்துள் ளார்.

இதுகுறித்து மல்லி புதூர் மின்வாரியத்தில் புகார் அளித்தும் நட வடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றம்சாட்டி யுள்ளார்.

வீட்டில் டிவி, மின் விசிறி மட்டுமே உள்ளதா கவும், அதிக மின் கட்ட ணத்தைச் செலுத்த முடியாததால் கடந்த 20 நாட்களுக்கு முன்பு மின் இணைப்பு துண்டிக்கப் பட்டதாகவும் தெரிவித் துள்ளார்.

இதனால் தனது குடும் பம் மின்சாரமின்றி தவித்து வருவதாக வேதனை தெரிவித்த ராஜேந்திரன், மின்வாரிய அதிகாரிகள் உரிய விசா ரணை நடத்தி மின் கட்ட ணத்தைச் சரிசெய்து, உட னடியாக மின் இணைப்பை வழங்க வேண்டும் எனத் தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாணிக்கம் கூர்க்கா!

முன்பு...

அவ்வை சண்முகம் சாலை

பின்பு அறிவாலயம்

இப்ப பனையூர் பண்ணை..

இப்படி

புதுப்புது முகாம்கள் தேடி

ஒட்டுத் திண்ணைகளில்

உயிர் வாழ்வதை விட

மொத்தக் கட்சியையும் மூடி விட்டு

அதற்கு காவலாக

மாணிக்கம் கூர்க்காவை



மாற்றினால் என்ன...



என்னநாஞ் சொல்றது!

மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்